புதுச்சேரி அரசு
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்
3-வது தளம், புதுச்சேரி வீட்டு வசதி வாரிய வளாகம், அண்ணா நகர், புதுச்சேரி – 605 005.
தொலைபேசி: 0413-2201256 : தொலைநகல்: 0413-2203494

***

## பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் - அறிவிப்பு

இந்திய அரசின், சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகத்தால் வெளியிடப்பட்டிருக்கும் கடற்கரை ஒழுங்கு முறைமண்டல அறிவிப்பாணை, 2019-ன் படி புதுச்சேரி அரசு, புதுச்சேரி யூனியன் பிரதேசத்தின் நான்கு பிராந்தியங்களுக்கும் திருத்தப்பட்ட புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தயாரித்துள்ளது. கடற்கரை ஒழுங்குமுறை மண்டல பகுதிகளில் செயல்படுத்தப்படும் அனைத்து செயல்களும் கடற்கரை ஒழுங்குமுறை மண்டல அறிவிப்பாணையின் படி ஒழுங்குமுறைப்படுத்தப்படும். புதுச்சேரி கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தை தீர்மானிக்கும் செயல்முறையின் ஒருபகுதியாக, உள்ளூர் மக்களின் ஆலோசனைகளை அறிந்து கொள்ள பின்வரும் விவரத்தின் படி பொதுமக்கள் கருத்துக் கேட்புக் கூட்டம் நடத்த பட உள்ளது.

| வ. எண் | திட்டவிவரம் | கேட்புரையின் தேதி மற்றும் நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | புதுச்சேரி அரசு தயாரித்துள்ள காரைக்கால் மாவட்டத்திற்கான திருத்தப்பட்ட கடற்கரை மண்டல மேலாண்மை திட்டம் | 23.05.2024<br>காலை 10.30 மணி | பாரதிதாசனார் திருமண மண்டபம்<br>காரைக்கால்மேடு<br>காரைக்கால்-609 605. |

திருத்தப்பட்ட காரைக்கால் மாவட்டத்திற்கான கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் நகல்கள் கீழ்கண்ட அலுவலகங்களில் கிடைக்கும், இதனை அனைத்து அலுவலக நாட்களிலும் அலுவலக நேரத்தில் பார்வையிடலாம்:

1. மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காரைக்கால்.
2. ஆணையர் அலுவலகம், காரைக்கால் நகராட்சி, காரைக்கால்.
3. ஆணையர் அலுவலகம், திருமலைராயன் பட்டினம் கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
4. ஆணையர் அலுவலகம், நிரவி கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
5. ஆணையர் அலுவலகம், கோட்டுச்சேரி கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
6. ஆணையர் அலுவலகம், நெடுங்காடு கொம்யூன் பஞ்சாயத்து, காரைக்கால்.
7. புதுச்சேரி மாசு கட்டுபாடு குழுமம் அலுவலகம், நேரு நகர், காரைக்கால்.

திருத்தப்பட்ட காரைக்கால் மாவட்டத்திற்கான கடற்கரை மண்டல மேலாண்மை திட்டத்தின் வரைவு நகல்கள் புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமத்தின் https://dste.py.gov.in/ppcc/CZMP-2019.html என்ற இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை பற்றியகருத்துக்களை பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை கீழ் கண்ட முகவரிக்கு எழுத்து மூலமாக 30 நாட்களுக்குள் சமர்பிக்கவேண்டும்.

உறுப்பினர் செயலர்
புதுச்சேரி மாசுக் கட்டுபாடு குழுமம்,
3-வது தளம், புதுச்சேரி வீட்டுவசதி வாரிய வளாகம்,
அண்ணாநகர், புதுச்சேரி- 605 005.
மின்னஞ்சல்: dste@py.gov.in, ppcc@py.gov.in

**Dr. N. ரமேஷ்**
உறுப்பினர் செயலர்
புதுச்சேரி மாசுக் கட்டுப்பாடு குழுமம்